**பண்டாரவளை மாநகர சபை - 2020**

------------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பண்டாரவளை மாநகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) பிரிவு 219 மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, பண்டாரவளை மாநகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமெனை நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- மாநகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய

முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் மாநகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்கான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 20,958,704 தொகை எனினும், அது நிதி மற்றும் செயற்பாடுகள் தொடர்பான கூற்றில் ரூபா 25,132,767 தொகை என ரூபா 4,174,063 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 960,575 தொகை கணக்கீடு செய்திருக்கவில்லை. | அடுத்த வருடம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) முன்னைய ஆண்டுகளுக்கான உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய கடன் வட்டி ரூபா 3,553,863 தொகையினை கணக்கீடு செய்யாமையால் அப்பெறுமதியினால் திரட்டிய நிதியம் மிகையாகவும், கடன் கொடுத்தோர் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது. | | |

**1.7 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1988 மாநகர சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 231 | மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள அனைத்து வீடுகள், கட்டிடங்கள், காணி மற்றும் வீடுகளில் வதிவோர், வாடகைதாரர் செலுத்த வேண்டிய வீதவரியை மாநகர சபையினால் அறவீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் 9,214 வீதவரி அலகுகள் தொடர்பாக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி ரூபா 12,478,766 தொகையினை அறவீடு செய்திருக்க வேண்டும். | நிலுவை தொகையை அறவீடு செய்வதற்கு நிகழ்ச்சித் திட்டமொன்று செயற்படுத்தப் பட்டுள்ளதென குறிப்பிடப்பட்டுள்ளது. | நிலுவை வீதவரி அறவீடு செய்யப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 19,567,571 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 81,593,369 தொகையாக இருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 62,025,798 இற்கான பின்னடைவு ஒன்று அவதானிக்கப்பட்டது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒரு வருடத்திற்கு மிகையான காலம் முதல் காணப்படும் நிலுவை வாடிவீட்டு முகாமைத்துவக் கட்டணம் ரூபா 17,551,588 தொகை மீளாய்வாண்டின் போதும் அறவீடு செய்யப் பட்டிருக்கவில்லை. | வாடிவீட்டு முகாமைத்துவ கட்டணம் செலுத்தும் படி நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவுருத்தப்பட்டதென குறிப்பிடப்பட்டுள்ளது. | நிலுவை வாடிவீட்டு முகாமைத்துவக் கட்டணம் அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஒரு வருடத்திற்கு மிகையான காலம் முதல் காணப்படும் நிலுவை நீர்க் கட்டணம் ரூபா 4,453,336 தொகை மீளாய்வாண்டின் போதும் அறவீடு செய்யப் பட்டிருக்கவில்லை. | நிலுவை நீர்க் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என குறிப்பிடப்பட்டுள்ளது. | நிலுவை நீர்க் கட்டணம் அறவீடு செய்யப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**3.1 செயற்பாட்டு திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான கோபியாவத்தை எனும் 42 பர்சஸ்களை கொண்ட காணி ஒன்று 45 துண்டுகளாக பிரிக்கப்பட்டு 17 குத்தகையாளர்களுக்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்ததுடன், 2012 ஆண்டு முதல் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை அந்த காணிக்குரிய நிலுவை குத்தகை ரூபா 32,846,375 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை. | நிலுவைத் தொகை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என குறிப்பிடப்பட்டுள்ளது. | நிலுவைக் குத்தகைத் தொகை அறவீடு செய்யப்பட வேண்டும். |

**3.2 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பண்டாரவளை மாநகர சபைக்குச் சொந்தமான மொத்த மற்றும் சில்லறை சந்தையின் 2020 ஆண்டிற்கான கட்டணம் அறவீடு செய்யும் உரிமையை குத்தகைக்கு கொடுப்பதற்காக விலைகூறல்தாரர்கள் அழைப்பின் போது 2019 ஆண்டின் இறுதி 10 நாட்கள் வரை தாமதப்படுத்தி பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்ததுடன் பெறுகை வழிகாட்டல் கோவையின் 6.2.2 பந்தியில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரண்பட்டுச் சென்று விலைகூறல் அழைத்தல் 6 நாட்களுக்கு வரையறுக்கப்பட்டிருந்தது. அதற்கு 03 நாட்களுக்கு பின்னர் விலைகூறல் படிவம் வழங்கியதன் மூலம் விலைகூறல் தாரர்களினால் நிறைவேற்றப்பட வேண்டும் என விதிக்கப்பட்டிருந்த விஷேட நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்காக போதியளவு கால அவகாசம் காணப்படாமை மற்றும் அதற்காக நியாயமான காலம் | மொத்த மற்றும் சில்லறை சந்தைகள் நீண்டகாலமாக ஒரே நபரினால் குத்தகைக்கு எடுப்பதை தவிர்ப்பதற்காக நிபந்தனைகளை கடுமையாக்கி பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்டு கேள்விதாரர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 229(2) இன் படி ஆளுனரின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. | முறைசார் விதமாக கேள்வி நடைமுறை கடைபிடிக்கப்பட்டு ஆதனங்களை குத்தகைக்கு வழங்க வேண்டும். |

ஒன்று வழங்கும் படி கோரியிருந்த போதிலும் அது தொடர்பாக பெறுகை குழு கவனம் செலுத்தியிருக்காமையால் விலைகூறல் தாரர்களுக்கு அவர்களின் சொத்துக்களின் உரிமை தொடர்பான சான்றிதழ் சமர்ப்பிப்பதற்கு இயலாமல் போதல் போன்ற மிகவும் சிறிய குறைபாடுகள் மீது உயர் விலைகூறல் சமர்ப்பித்திருந்த விலைகூறல் தாரர்களின் விலைகூறல்கள் மறுக்கப்பட்டிருத்தல் மற்றும் குறைந்த விலைகூறல் சமர்ப்பித்திருந்த விலைகூறல் தாரர்களின் விலைகூறல்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தமையால் பண்டாரவளை மாநகர சபைக்கு ரூபா 8,290,000 இற்கான நிதிசார் நட்டம் ஒன்று நடைபெறுவதற்கு நேரிட்டிருந்தது.